"முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்"!!

# விடியல்

**TNPSC பயிற்சி மையம்,**
**ஆரணி, போளூர், வேலூர் & செங்கம்**

www.vidiyalarni.blogspot.com

செல்: 9894316951, 9941146326, 9047936586

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி ]

[மொத்த மதிப்பெண்கள் : 300

## GROUP-II தேர்வு மாதிரி வினாத்தாள்.

1. எந்த வழக்கில் முகப்புரை அரசியலமைப்பின் ஒரு பகுதி இல்லை என உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது?
   A) கேசவானந்த பாரதி வழக்கு B) S.R பொம்மை வழக்கு
   C) பெருபாரி வழக்கு D) கோலக் நாத் வழக்கு.
2. தடுப்புக் காவல் கீழ்கண்ட எந்த உரிமையை கட்டுப்படுத்தும்?
   A) சுதந்திரமாக நடமாடும் உரிமை B) கலாச்சார உரிமை
   C) சமத்துவ உரிமை D) உயிர்வாழும் உரிமை
3. கீழ்க்கண்டவற்றுள் எது உறுப்பினர் அல்லாதவரால் நடத்தப்படுவது?
   A) மக்களவை B) மாநிலங்களவை
   C) சட்டமேலவை D) A & C இரண்டும்.
4. EEG - என்பதின் விரிவாக்கம்.
   A) Electro Encephalo Graphy
   B) Electro Encephalo Gram
   C) Electronic Electric Gram
   D) Electropathy Encephalo Gram.
5. நீதிமன்றத்தை அவமதிப்பு செய்தாரை தண்டித்தல் என்ற கருத்து எங்கிருந்து பெறப்பட்டது?
   A) இங்கிலாந்து B) கனடா C) அயர்லாந்து D) அமெரிக்கா.
6. மதசார்பின்மை என்பது ஒரு நாடு
   **A)** Religious B) Irreligious C) Anti Religious D) Non Religious
7. நீதிக் கட்சியை ஆதரித்த பத்திரிக்கை
   A) ஜஸ்டிஸ் B) திராவிட நாடு C) ஆந்திரபிதாமகன் D) அனைத்தும்
8. நாளமில்லா சுரப்பிகளின் மையம்
   A) ஹைப்போ தலாமஸ் B) தலாமஸ்
   C) பான்ஸ் D) பிட்யூட்டரி.
9. மாநில தேர்வாணையதின் தலைவர் யாரால் பதவி நீக்கம் செய்யப் படுகிறார்?
   A) குடியரசுத் தலைவர் B) ஆளுநர்
   C) மத்திய தேர்வாணையத் தலைவர் D) தலைமை நீதிபதி.
10. கீழ்க்கண்ட எந்த சந்தர்ப்பத்தில் மக்களவை சபாநாயகர் வாக்களிப்பார்?
    A) அனைத்து மசோதாக்கள் B) முடிவு செய் வாக்கு
    C) பணமசோதா மட்டும் D) வாக்களிப்பதில்லை.
11. வைட்டமின் – 'சி' யின் வேதியியல் பெயர்
    A) அஸ்கார்பிக் அமிலம் B) கால்சிபெரால்
    C) டோக்கோபெரால் D) பில்லோ குயினன்.

Vidiyal Coaching Centres

12. யூஜெனிக்ஸ் என்பது..

A) மரபியலில் ஆய்வு மேற்கொள்வது

B) உயிருள்ள திசுவின் மருத்துவ ஆராய்ச்சி

C) மனிதவள முன்னேற்றத்தை மரபு வழியாக மேற்கொள்வது

D) வியாதிகளின் தன்மை காரணம் பற்றியது.

13. சூப்பர் பக் என்னும் பாக்டீரியாவின் பயன்

A) எண்ணெய்க் கழிவுகளைச் சுத்தம் செய்தல்

B) கேரியோடைப் அமைப்பைப் புரிந்து கொள்ள உதவுதல்

C) வைரஸ்களைக் கொல்ல உதவுதல்

D) மற்ற பாக்டீரியாக்களைக் கொல்ல உதவுதல்

14. மூளையை சுற்றியுள்ள மெனின்ஜஸை வெளியிலிருந்து உட்புறமாக வரிசைபடுத்தவும்.

A) பயாமேட்டர், அராக்னாய்டு, டியூராமேட்டர்

B) அராக்னாய்டு, பயாமேட்டர், டியூராமேட்டர்

C) மெனின்ஜஸ், அராக்னாய்டு, பயாமேட்டர்

D) டியூராமேட்டர், அராக்னாய்டு, பயாமேட்டர்.

15. மன்னிப்பு அளித்தல் என்பது எதைச் சார்ந்தது?

A) செயல்துறை B) சட்டத்துறை

C) நீதித்துறை D) செயல் & நீதித்துறை.

16. உடலை சமநிலைப்படுத்தும் & கேட்கும் பகுதியை கட்டுப்படுத்தும் பெருமூளையின் பகுதி..

A) பிரான்டல் B) பெரைட்டல் C) ஆக்ஸிபிட்டல் D) டெம்போரல்.

17. மக்கள் தொகை கணக்கெடுப்பு எந்தப் பட்டியலில் வருகிறது?

A) மாநிலப் பட்டியல் B) மத்தியப் பட்டியல்

C) பொதுப் பட்டியல் D) இவற்றில் ஏதுமில்லை.

18. நியூட்ரோபில், ஈஸ்னோபில், பேஸோபில், லிம்போஸைட், மோனோஸைட் என்பவை....

A) இரத்த சிகப்பணுவின் செல்கள்

B) இரத்த வெள்ளையணுக்களின் செல்கள்

C) இரத்த தட்டுக்களின் வகைகள்

D) இவற்றில் ஏதுமில்லை.

19. பிட்யூட்டரியின் வளர்ச்சி ஹார்மோன் (GH or STH) முதிர் பருவத்தில் அதிகம் சுரந்தால் ஏற்படும் குறைபாடு

A) மிட்ஜெட் B) சைமான்டி நோய்

C) அக்ரோமெகாலி D) காய்ட்டர்.

20. இந்து முன்னேற்ற மேன்மை சங்கத்தை தோற்றுவித்தவர்

A) லட்சுமி நரசு செட்டி B) ஸ்ரீ நிவாச பிள்ளை

C) அனந்த சார்லு D) ரெங்கையா நாயுடு.

21. மனித ஜீனோம் திட்டத்தின் பயன்

A) சொமாட்டிக் செல் ஜீன் தெரபியில் உதவுதல்

B) திடீர் மாற்றத்தைக் கண்டறிதல்

C) மனித ஜீன்களின் கட்டுமானத்தைக் கண்டறிதல்

D) புரதத்திற்கான ஜீன் கோடான்களைக் கண்டறிதல்.

Vidiyal Coaching Centres

22. இன்சுலின் எத்தனை அமினோ அமிலங்களால் ஆனது?

A) 51 B) 29 C) 80 D) 15.

23. "வாத்ய வித்யாதரன்" என சிறப்பிக்கப்படுபவர்

A) முதலாம் மகேந்திரவர்மன் B) முதலாம் நரசிம்மவர்மன்

C) ராஜ சிம்மன் D) அபராஜிதன்.

24. மரபுப் பொறியியலில் ஜீன்களை மாற்றுவதற்காகப் பயன்படுவது....

A) பாக்டீரியா B) வைரஸ் C) பிளாஸ்மிட் D) என்ஸைம்.

25. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| a) | வேவல் | 1. | பாகிஸ்தான் கோரிக்கை |
| b) | ரீடிங் | 2. | மாப்ளா கலகம் |
| c) | வெலிங்டன் | 3. | சிம்லா மாநாடு |
| d) | லின்லித்கோ | 4. | வகுப்புவாரி பிரிதிநிதித்துவம். |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 4 | 1 |
| B) | 4 | 1 | 3 | 2 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 1 | 2 | 4 | 3. |

26. எப்பொழுது சைமன் கமிஷன் அமைக்கப்பட்டது?

A) பால்டுவின் இங்கிலாந்து அரசு செயலராக இருந்தபோது

B) பிர்கன்ஹெட் பிரிட்டிஷ் இந்திய அமைச்சராக இருந்தபோது

C) இர்வின் பிரபு வைசிராயாக இருந்தபோது

D) தொழிலாளர் கட்சி இங்கிலாந்தில் ஆட்சிசெய்தபோது.

27. 1890 – ல் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் முதல் பெண் பட்டதாரியான இவர் காங்கிரசு மாநாட்டில் உரை நிகழ்த்தியவர்.

A) கதம்பினி கங்குலி B) பண்டிட் ரமா பாய்

C) மாளவிகா முகர்ஜி D) எவருமில்லை.

28. ஒரு வானியல் அலகு என்பது கீழ்க்கண்ட எவற்றுக்கு இடையேயான சராசரி தூரம்?

A) புவிக்கும் சூரியனுக்கும் B) புவிக்கும் சந்திரனுக்கும்

C) சந்திரனுக்கும் சூரியனுக்கும் D) புளுட்டோக்கும் சூரியனுக்கும்.

29. சமவெளிகளில் சுற்றுக் சூழல் சமநிலையைப் பேண நாம் பராமரிக்கத் தேவையான குறைந்தபட்ச காடுகளின் சதவீதம்

A) 50% B) 40% C) 33% D) 25%.

30. காவிரி ஆற்றினால் உருவாக்கப்படும் ஆற்றுத் தீவு

A) ஸ்ரீரங்கம் B) சிவசமுத்திரம்

C) ஸ்ரீரங்கப்பட்டணம் D) இவை அனைத்தும்.

31. அந்தமானின் உயரந்த சிகரமான 'சாடில்' சிகரத்தின் அமைவிடம்.

A) பெரிய அந்தமான் B) மத்திய அந்தமான்

C) சிறிய அந்தமான் D) வடக்கு அந்தமான்.

Vidiyal Coaching Centres

32. 2001 – கணக்கெடுப்பின்படி, கேரளாவுக்கு அடுத்தபடியாக அதிக எழுத்தறிவைப் பெற்றுள்ள மாநிலம்.

A) நாகாலாந்து B) தமிழ்நாடு C) மிசோரம் D) மேற்குவங்கம்.

33. கரும்பு உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களின் இறங்கு வரிசையைக் குறிப்பிடுக.

A) மகாராஷ்டிரா, உத்ரப்பிரதேஷ், தமிழ்நாடு, ஆந்திரா

B) உத்ரப்பிரதேஷ், மஹாராஷ்டிரா, தமிழ்நாடு, ஆந்திரா

C) உத்ரப்பிரதேஷ், தமிழ்நாடு, மஹாராஷ்டிரா, ஆந்திரா

D) உத்ரப்பிரதேஷ், ஆந்திரா, தமிழ்நாடு, மஹாராஷ்டிரா.

34. இந்தியாவில் மக்கள் தொகை அதிகரிப்புக்கு முக்கிய காரணம்.

A) குறையும் இறப்பு விகிதம்

B) அதிகரிக்கும் பொருளாதார வளர்ச்சி

C) இளவயது திருமணங்கள்

D) அதிகரிக்கும் பிறப்பு விகிதம்.

35. ஆசியாவின் மிகப் பெரிய தொலைநோக்கி அமைக்கப்பட்டுள்ள இடம்.

A) கொடைக்கானல் B) மகேந்திரகிரி

C) காவனூர் D) தேவஸ்தல்

36. கீழ்க்கண்ட மாநிலங்களுள் மியான்மர் நாட்டுடன் எல்லையைக் கொண்டிராத மாநிலம்

A) அசாம் B) மணிப்பூர்

C) நாகாலாந்து D) அருணாச்சலப் பிரதேசம்.

37. சீபெக் விளைவின் மறுதலை என்பது....

A) பெல்டியர் விளைவு B) தாம்ஸன் விளைவு

C) இராமன் விளைவு D) எதிர் தாம்ஸன் விளைவு.

38. மாக்மா குளிர்ந்து படிகங்கள் தோன்றும் போது உருவாகும் பாறைகள்.

A) படிவுப் பாறைகள் B) தீப்பாறைகள்

C) உருமாறிய பாறைகள் D) இவையனைத்தும்.

39. கிழ்கண்ட வாக்கியங்களைக் கவனி:

கூற்று (A): இந்தியப் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகமாக உள்ளது

காரணம் (R): இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கோட்டிலிருந்து அதிக தூரத்தில் உள்ளது.

கீழ்க்காணும் குறியீடு மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

A) (A)மற்றும் (R) இரண்டும் சரி, (R)என்பது (A)விற்கு சரியான விளக்கம்

B) (A)மற்றும் (R) இரண்டும் சரி, (R)என்பது (A)விற்கு சரியான விளக்கமல்ல

C) (A) சரி ஆனால் (R) தவறு

D) (A) தவறு ஆனால் (R) சரி.

40. வீட்ஸ்டோன் சமனச் சுற்றில் சமநிலைக்கான நிபந்தனை.

A) P/Q x R/S B) P/Q – R/S C) P/Q + R/S D) P/Q = R/S.

41. கீழ்க்கண்டவற்றுள் கார்பனின் புறவேற்றுமை வடிவம் எது?.

A) வைரம் B) கிராபைட் C) புல்லரீன் D) அனைத்தும்.

Vidiyal Coaching Centres

42. அமைதிப்படுத்தியாகப் பயன்படுத்தப்படும் அமிலம்

A) டார்டாரிக் அமிலம் B) பென்சாயிக் அமிலம்

C) பியூட்டனாயிக் அமிலம் D) பார்பிசூரிக் அமிலம்.

43. டெஃப்லான் ஒரு

A) பூச்சிக்கொல்லி B) மருந்து C) பலபடி D) சாயம்.

44. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1) BHC - ன் விரிவாக்கம் பென்சீன் ஹெக்ஸா குளோரைடு

2) BHC - ன் வேறுபெயர் காமாக்சீன்

3) BHC - ஒரு சிறந்த பூஞ்சைக் கொல்லி.

A) 1, 2, சரி B) 1,3, சரி

C) 2, 3, சரி D) அனைத்தும் சரி.

45. ஐசோடோனிக் கரைசல் என்பது.

A) சம அடர்த்தி கொண்ட கரைசல்கள்

B) சம சவ்வூடு பரவல் அழுத்தமுள்ள கரைசல்கள்

C) சம அளவு கரைப்பானைக் கொண்ட கரைசல்கள்

D) சம ஆவி அழுத்தத்தைக் கொண்ட கரைசல்கள்.

46. 16 வகையான மகாஜனபதங்களை பட்டியலிடும் புத்த சமய நூல்

A) மகாவம்சம் B) சுத்தபீடகம்

C) தீபவம்சம் D) வினய பீடகம்.

47. கார்போஹைட்ரேட்டுகளில் இருப்பவை

A) கார்பன், ஹைட்ரஜன், மற்றும் நைட்ரஜன்

B) நைட்ரஜன், கார்பன், மற்றும் ஆக்ஸிஜன்

C) ஆக்ஸிஜன், ஹைட்ரஜன் மற்றும் நைட்ரஜன்

D) கார்பன், ஹைட்ரஜன், மற்றும் ஆக்ஸிஜன்.

48. ஒலி ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றும் சாதனம்.

A) மைக்ரோ போன் B) ஒலி பெருக்கி

C) சோனோ மீட்டர் D) ஹெட்போன்.

49. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க

1) யுரேனியம் ஓர் இயற்கை கதிரியக்கத் தனிமம்,

2) ரேடியம் கியூரியால் கண்டுபிடிக்கப்பட்டது.

A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு.

50. ‘ஏறு தழுவல்’ என்னும் வீரவிளையாட்டு பற்றி கூறும் எட்டுத்தொகை நூல்.

A) குறுந்தொகை B) புறநானூறு

C) கலித்தொகை D) ஐங்குறுநூறு.

51. பொருந்தாததைத் தேர்க.

A) சிறுபாணாற்றுப்படை B) குறிஞ்சிப்பாட்டு

C) பெரும்பாணாற்றுப்படை D) மலைபடுகடாம்.

52. சேர மன்னர்களைப் பற்றி அதிகமாக விவரிக்கும் சங்க நூல்.

A) பரிபாடல் B) அகநானூறு

C) பதிற்றுப்பத்து D) புறநானூறு.

Vidiyal Coaching Centres

53. பதினெண் மேற்கணக்கு நூல்கள் எவை?

A) சிலப்பதிகாரம், மணிமேகலை

B) திருக்குறள், நாலடியார்

C) வளையாபதி, குண்டலகேசி

D) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு.

54. திருக்குறளுக்கு சிறந்த உரை எழுதியவர்.

A) மு.வ B) முனுசாமி C) பரிமேலழகர் D) கருணாநிதி.

55. 'உரையிடைப்பட்ட பாட்டுடைச் செய்யுள்' எது?

A) திருக்குறள் B) நாலடியார்C) சிலப்பதிகாரம் D) மணிமேகலை.

56. இந்திர விழா எத்தனை நாட்கள் நடைபெறும்?

A) 12 B) 18 C) 21 D) 28.

57. எது சரியாகப் பொருந்தியுள்ளது?

A) மாதவி - மணிமேகலை

B) அறவண அடிகள் - சிலப்பதிகாரம்

C) குணமாலை - சீவக சிந்தாமணி

D) கட்டியங்காரன் - வளையாபதி.

58. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

A) ஜி.யு. போப் B) வீரமாமுனிவர்

C) பெர்சிவல் D) இவர்களுள் எவருமில்லை.

59. பிரபந்த மாலை என்பது.

A) 11- வது திருமுறை B) 8 - வது திருமுறை

C) 9 - வது திருமுறை D) 10 –வது திருமுறை.

60. பாப்லி அணை கட்டுமானப் பிரச்சனையில் தொடர்புடைய இரு மாநிலங்கள்.

A) ஆந்திரா – ஒரிஸா B) ஆந்திரா – மகாராஷ்டிரா

C) கர்நாடகா – ஆந்திரா D) தமிழ்நாடு – ஆந்திரா.

61. 'மக்கள் இலக்கியம்' என்று போற்றப் படுவது.

A) சீறாப் புராணம் B) பெரியபுராணம்

C) கம்பராமாயணம் D) சிலப்பதிகாரம்.

62. தமிழில் தோன்றிய முதல் உரைநடை நூல்.

A) நினைவு மஞ்சரி B) இறையனார் களவியலுரை

C) கண்டதும் கேட்டதும் D) புதியதும் பழையதும்.

63. பொருந்தாததைத் தேர்க.

A) சிற்றில் B) நீராடல் C) சிறுதேர் D) சிறுபறை.

64. 'சும்மா இருப்பதே சுகம்' – யார் கூற்று?

A) குமரகுருபரர் B) தாயுமானவர்

C) காளமேகப் புலவர் D) அருணகிரிநாதர்.

65. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1) மு.வ. - வின் முதல் நாவல் - பாவை

2) சாகித்ய அகாதமி பரிசு பெற்ற மு.வ. வின் நாவல் - அகல்விளக்கு

3) சென்னைப் பல்கலையின் டாக்டர் பட்டம் பெற்ற முதல் தமிழர் மு.வ

4) மு.வ - வின் கடைசி நாவல் கயமை.

A) 1, 2, 4 சரி B) 2, 3, 4 சரி

C) 1, 3, 4 சரி D) 1, 2, 3 சரி.

Vidiyal Coaching Centres

66. இளைஞர் ஒலிம்பிக் போட்டிகள் 2010 – ல் நடைபெற்ற நாடு

A) இலங்கை B) சீனா C) மலேஷியா D) சிங்கப்பூர்.

67. பொருத்துக:

| பட்டியல் I நூல் | | பட்டியல் II நூலாசிரியர் | |
|---|---|---|---|
| a) | நாக நாட்டரசி | 1. | வ.சுப. மாணிக்கம் |
| b) | வஞ்சிமா நகர் | 2. | இரா.பி. சேதுப்பிள்ளை |
| c) | வீரமா நகர் | 3. | மறைமலையடிகள் |
| d) | தமிழ்க்காதல் | 4. | இராகவையங்கார். |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 2 | 1 | 4 | 2 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 3 | 4 | 2 | 1. |

68. எது சரியாகப் பொருந்தவில்லை?

A) திரை - ஜெயகாந்தன்

B) சிற்பியின் நரகம் - புதுமைப்பித்தன்

C) தேரோட்டி மகன் - பி.எஸ். இராமையா

D) மாடத்தேவன் சுனை - கல்கி.

69. எது சரியாகப் பொருந்தியுள்ளது?

A) சிறை - லட்சுமி

B) சக்தி வைத்தியம் - சுஜாதா

C) சுமைதாங்கி - ஜெயகாந்தன்

D) பிறந்த மண் - தி. ஜானகிராமன்.

70. 2011 – ம் ஆண்டுக்கான தமிழக அரசின் அய்யன் திருவள்ளுவர் விருதைப் பெறுபவர்.

A) வியனரசு B) இளவரசு C) தமிழரசு D) வளனரசு.

71. எது சரியாகப் பொருந்தவில்லை?

A) ஜனசக்தி - ப. ஜீவானந்தம்

B) ஆனந்த விகடன் - எஸ். எஸ். வாசன்

C) தினமணி - சதானந்தம்

D) தினத்தந்தி - தனுஷ்கோடி ஆதித்தன்.

72. மிதக்கும் தேசிய பூங்கா அமைந்துள்ள மாநிலம்.

A) கேரளா B) மணிப்பூர் C) மிசோரம் D) மேகாலயா.

73. ‘காமன்வெல்த் தினம்’ அனுசரிக்கப்படுவது

A) ஏப்ரல் - 24 B) மே - 24

C) மே – முதல் திங்கள் D) மார்ச் – 2 ம் திங்கள்.

74. அன்னை தெரசா நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட நாள்

A) ஆகஸ்ட் – 24, 2010 B) செப்டம்பர் 24, 2010

C) மே – 26, 2010 D) ஆகஸ்ட் 26, 2010.

75. தமிழ்நாட்டில் மிகக் குறைந்த கல்வியறிவு கொண்ட மாவட்டம்..

A) நீலகிரி B) தர்மபுரி C) கிருஷ்ணகிரி D) பெரம்பலூர்.

Vidiyal Coaching Centres

76. இந்தியாவில் பன்றிக் காய்ச்சலுக்கு பலியான முதல் நபர்.

A) ரீடா சர்மா B) ருக்ஷானா

C) கிரன் தேகா D) ரிடா ஷேக்.

77. MRTP – வணிகச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு.

A) 1967 B) 1966 C) 1969 D) 1971.

78. ஒரு பண்டத்தை ஒருவரே உற்பத்தி செய்து, விற்பனையும் செய்வதற்குப் பெயர்.

A) தனியுரிமை B) முற்றுரிமை

C) நிறைவுரிமை D) இவற்றுள் எதுவுமில்லை.

79. சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தால் மூட உத்திரவிடப்பட்ட தூத்துக்குடி ஸ்டெர்லெட் ஆலை...

A) இரும்பு உருக்காலை B) தாமிர உருக்காலை

C) உர உற்பத்தி ஆலை D) அலுமினிய உருக்காலை.

80. ‘வாரம்’- என்பது ஒரு பொருளைப் பயன்படுத்திட நாம்.

A) மாதா மாதம் செலுத்தும் தொகை

B) வாரா வாரம் செலுத்தும் தொகை

C) ஆண்டுக்கு ஒரு முறை செலுத்தும் தொகை

D) ஆறு மாதத்திற்கு ஒரு முறை செலுத்தும் தொகை.

81. ‘Repressed Inflation’ ( கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கம் ) ஏற்படும் போது.

A) விலை மட்டம் உயரும்

B) அதிக பணம் குறைந்த பண்டங்களைத் துரத்தும்

C) விலை உயராமல் பணவீக்கம் தோன்றும்

D) இவை அனைத்தும்.

82. ‘Zero Based Budgeting’ – இதனை அடிப்படையாகக் கொண்டது.

A) அடிப்படை ஆண்டு B) நிதியாண்டு

C) புத்தாண்டு D) கல்வி ஆண்டு.

83. ‘C’ Language was developed by

A) Dennis Ritchie B) Louis Brown

C) Andrew Eliot D) Thomas Bruce.

84. கணினி வைரஸ் தாக்குதல்களால் பாதிக்கப்படாத Operating System எது?

A) Windows XP B) MS - DOS

C) Windows vista D) Linux.

85. 100 க்கும் 1000 க்கும் இடைபட்ட 13 ஆல் வகுபடக்கூடிய அனைத்து எண்களின் கூடுதல்.

A) 45332 B) 46334 C) 47354 D) எதுமில்லை.

86. ஓர் அறையின் நீளம் 20 மீ, அகலம் 8மீ, அதை சுற்றி வெளியே 1மீ அகலத்தில் நடைபாதை ஒன்று அமைந்துள்ளது எனில் அதன் பரப்பளவு.

A) 100மீ B) 220மீ C) 60மீ D) 56மீ.

87. 70 செ.மீ விட்ட அளவுள்ள உருளை ஒன்றைச் சுற்றி 11மீ நீளமுள்ள கம்பி சுற்றி வைக்கப்பட்டுள்ளது அது எத்தனை முறை உருளையை சுற்றி வைக்கப்பட்டுள்ளது.

A) 7 B) 6 C) 5 D) 4.

88. $45°$ உள்ள செங்கோண முக்கோணத்தின் பக்க அளவுகளின் விகிதம்?

A) $1 : \sqrt{3} : 2$ B) $1 : 1 : 2$ C) $1 : 1 : \sqrt{2}$ D) $1: 3: 2$

Vidiyal Coaching Centres

89. 18 கிராம் என்பது 7.2 கிலோவில் எத்தனை சதவீதம்.

A) 25% B) 2.5% C) 0.25% D) 1%.

90. சம நீள அளவு கொண்ட A என்ற வேகமாக செல்ல கூடிய புகைவண்டியும் B என்ற வேகம் குறைவான புகைவண்டியும் ஒரேதிசையில் செல்லும் போது 20 வினாடிகளில் ஒன்றை ஒன்று கடக்கிறது எதிர் எதிர்திசையில் செல்லும்போது ஒன்றை ஒன்று 8 வினாடிகளில் கடக்கிறது எனில் புகை வண்டிகளின் வேக விகிதம் என்ன?

A) 3:2 B) 5:3 C) 7:3 D) 7:5.

91. முகடு = 20, இடைநிலை = 19 எனில் சராசரியின் மதிப்பு.

A) 9 B) 10 C) 10.5 D) 18.5

92. கூட்டு சராசரியிலிருந்து கழிக்கப்படுகின்ற விலக்கங்களின் கூடுதல்.

A) 2 B) 0 C) 4 D) 5.

93. மூலங்களின் கூடுதல்பலன் –2, பெருக்கல்பலன் -4, என்று உள்ள இருபடி சமன்பாடு.

A) $x^2 - 2x - 4 = 0$ B) $x^2 + 2x + 4 = 0$

C) $x^2 + 2x - 4 = 0$ D) $x^2 - 2x + 4 = 0$.

94. ஆக்ரா நகரை நிர்மாணித்தவர்

A) அலாவுதீன் கில்ஜி B) பால்பன்

C) முகமதுபின் துக்ளக் D) சிக்கந்தர் லோடி.

95. ‘மீர் பக்ஷி’ - எந்த துறையுடன் தொடர்புடையது?

A) ராணுவம் B) வருவாய்

C) அயலுறவு D) மருத்துவம்.

96. ‘The shape of the Beast’ – என்ற நூலின் ஆசிரியர்.

A) சசி தரூர் B) சல்மான் ருஷ்டி

C) அருந்ததிராய் D) பாரக் ஒபாமா.

97. எந்தக் கமிட்டியின் பரிந்துரையின் பேரில் NABARD தோற்றுவிக்கப்பட்டது?

A) பொதுக் கணக்கு குழு B) சிவராமன் குழு

C) நரசிம்மன் குழு D) ஜானகிராமன் குழு.

98. வறுமை – பற்றி சமீபத்தில் ஆய்வு செய்த கமிட்டி…

A) ஸ்ரீ கிருஷ்ணா கமிட்டி B) டெண்டுல்கர் கமிட்டி

C) சதீஸ் சர்மா கமிட்டி D) சரத் சந்திரா கமிட்டி.

99. WHO – ன் தற்போதைய Director General

A) ஜேக்கஸ் டியோப் B) மார்கரெட் சான்

C) ஜுவான் சோமவியா D) பாஸ்கல் லாமி.

100. தற்போதயை மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர்…

A) தயாநிதி மாறன் B) ஜெய்ராம் ரமேஷ்

C) ஆ. ராசா D) கபில் சிபல்.

101. பிரித்து எழுதுக : ‘நல்வினை’

A) நன்மை + வினை B) நல் + வினை

C) நல்ல + வினை D) நன்று + வினை.

Vidiyal Coaching Centres

102. பிரித்து எழுதுக : ‘தீதிலா’

A) தீ + திலா B) தீது + இலா

C) தீதில் + இலா D) தீது + இல்லா.

103. பிரித்து எழுதுக : கன்னலடா

A) கன்னல் + அடா B) கன்னல் + ஆடா

C) கன்ன + லடா D) கன் + னலடா.

104. பிரித்து எழுதுக : ‘நிலத்தறைந்தான்’

A) நிலத்து + அறைந்தான் B) நிலம் + அறைந்தான்

C) நிலன் + அறைந்தான் D) நிலம் + மறைந்தான்.

105. எதிர்ச்சொல் தருக: ‘தொடக்கம்’

A) ஆரம்பம் B) முடிவு C) நடுநிலை D) துவக்கம்.

106. பிரித்து எழுதுக : சிறுபடை

A) சிறு + படை B) சிறுமை + படை

C) சில + படை D) சிறிய + படை.

107. எதிர்ச்சொல் தருக: ‘தீது’

A) சூது B) நன்று C) வாது D) தூது.

108. எதிர்ச்சொல் தருக: ‘அண்மை’

A) அருகில் B) தொலைவில் C) சேய்மை D) நெருக்கம்.

109. எதிர்ச்சொல் தருக: ‘கேட்டார்’

A) கேளார் B) கேள்வியுடையார் C) அறிந்தவர் D) விரும்பியவர்.

110. எதிர்ச்சொல் தருக: ‘பள்ளம்’

A) மேடு B) மலை C) தாழ்ச்சி D) ஆழம்

111. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:

A) இறந்தகாலம் B) நிகழ்காலம் C) கார்காலம் D) எதிர்காலம்.

112. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:

A) ஆரண்ய காண்டம் B) கிட்கிந்தா காண்டம்

C) சுந்தர காண்டம் D) வஞ்சிக் காண்டம்.

113. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:

A) இராமன் B) இலக்குவன் C) பரதன் D) இராவணன்.

114. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:

A) பரணி B) பிள்ளைத்தமிழ் C) அந்தாதி D) கலித்தொகை.

115. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:

A) இயேசு காவியம் B) இரட்சணிய யாத்திரிகம்

C) இரட்சணிய மனோகரம் D) இரட்சணியக் குறள்.

116. மரபுப் பிழைகள் அற்ற தொடரைக் குறிப்பிடுக:

A) எங்கள் தோட்டத்தில் வாழைச் செடியும், புடலைச் செடியும் உள்ளன

B) எங்கள் தோட்டத்தில் வாழை மரமும், புடலைக் கொடியும் உள்ளன

C) எங்கள் தோட்டத்தில் வாழைச் செடியும், புடலைக் கொடியும் உள்ளன

D) எங்கள் தோட்டத்தில் வாழை மரமும், புடலைச் செடியும் உள்ளன.

117. ‘பாய்’ – என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க:

A) பாயும் B) பாய்ந்து C) பாய்கின்ற D) பாய.

Vidiyal Coaching Centres

118. சந்திப்பிழை இல்லாத் தொடரைத் தேர்க:

A) சிதம்பரனார் செய்நன்றி மறவாச் செம்மல்

B) சிதம்பரனார் செய்ந்நன்றி மறவா செம்மல்

C) சிதம்பரனார் செய்ந்தன்றி மறவாச் செம்மல்

D) சிதம்பரனார் செய்நன்றி மறவா செம்மல்.

119. வழூஉச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க :

A) எண்ணெய் விலை குறைந்து விட்டது

B) எண்ணைய் வெலை குறைந்து விட்டது

C) எள்நெய் விலை குறைஞ்சு விட்டது

D) எண்ணைய் விலை குறைந்து விட்டது.

120. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க :

A) கல்வி மந்திரி நன்றாகப் பேசினார்

B) கல்வி அமைச்சர் நன்றாகப் பேசினார்

C) கல்வி மினிஸ்டர் நன்றாகப் பேசினார்

D) கல்வி அமைச்சர் நன்றாக உரையாற்றினார்.

121. ஒருமைப் பன்மை பிழைகளை நீக்குக:

A) இந்தியர்களிடம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் திறமை இருக்கிறது

B) இந்தியர்களிடம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் திறமை இருக்கின்றனர்

C) இந்தியனிடம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் திறமை இருக்கின்றனர்

D) இந்தியர்களிடம் எதையும் புரிந்து கொள்ளும் திறமை இருக்கின்றான்.

122. 'Admission' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க :

A) வருகை B) நீக்கம் C) அலுவலர் D) சேர்க்கை.

123. 'Geography' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க :

A) வரலாறு B) புவியியல் C) பொருளியல் D) வணிகவியல்.

124. 'Documentary' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க :

A) தொலைக்காட்சித் தொடர் B) ஆவணப் படம்

C) சினிமாப் படம் D) டாக்குமெண்டரி.

125. 'Harvest' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க :

A) நாற்று நடுதல் B) களை எடுத்தல்

C) அறுவடை செய்தல் D) நீர்ப் பாய்ச்சுதல்.

126. 'Plastic' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க :

A) பேக்கலைட் B) இலகு காகிதம்

C) ஞெகிழி D) இளகு காகிதம்.

127. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | புரம் | புறம் |
|---|---|---|
| A) | தேசம் | மாலை |
| B) | நகர் | வெளி |
| C) | நாடு | உள்ளே |
| D) | வெயில் | நடுவே. |

128. 'நீள்' – என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைத் தேர்ந்தெடுக்க :

A) நீளும் B) நீண்ட C) நீள்கின்ற D) நீட்டம்.

Vidiyal Coaching Centres

129. ‘வெல்’ – என்பதன் வினையாலணையும் பெயரைக் தேர்ந்தெடுக்க :

A) வென்று B) வென்ற C) வெல்பவர் D) வெற்றி.

130. ‘உதி’ - என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்றைத் தேர்ந்தெடுக்க :

A) உதித்தது B) உதித்தல் C) உதித்து D) உதித்த.

131. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க :

| | கரை | கறை |
|---|---|---|
| A) | தூங்கு | சுத்தம் |
| B) | வேண்டும் | புழுக்கம் |
| C) | கூவு | அழுக்கு |
| D) | பார் | நெருக்கம். |

132. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க :

| | இலை | இளை |
|---|---|---|
| A) | செடி | மூச்சு |
| B) | கொடி | ஓடுதல் |
| C) | முற்றிய தளிர் | மெலிதல் |
| D) | விரிப்பு | லேகியம் |

133. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க :

| | சூல் | சூள் |
|---|---|---|
| A) | கருப்பம் | சபதம் |
| B) | மரம் | நாக்கு |
| C) | மலர் | கம்பு |
| D) | மகரந்தம் | மனிதன். |

134. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க :

| | பண் | பன் |
|---|---|---|
| A) | பண்டகி | பன்மை |
| B) | பண்டம் | பலவின்பால் |
| C) | இசை | சொல்லல் |
| D) | பண்கொடி | கலம்பகம். |

Vidiyal Coaching Centres

135. ‘துவல்’ – என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்றைத் தேர்ந்தெடுக்க.

A) துவன்ற B) துவன்றது C) துவலும் D) துவல்தல்.

136. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

A) கடு, கடி, கள், கண் B) கள், கடி, கடு, கண்

C) கடி, கடு, கண், கள் D) கண், கள், கடி, கடு.

137. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

A) அஞ்சல், ஆணை, ஓதல், ஔடதம்

B) ஆணை, ஔடதம், ஓதல், அஞ்சல்

C) அஞ்சல், ஓதல், ஆணை, ஔடதம்

D) ஓதல், ஔடதம், அஞ்சல், ஆணை.

138. ‘படித்தல்’ – பெயர்ச் சொல்லின் வகை அறிக:

A) தொழிற்பெயர் B) பண்புப்பெயர் C) இடப்பெயர் D) சினைப்பெயர்.

139. ‘மயில்’ – பெயர்ச் சொல்லின் வகை அறிக:

A) பொருட்பெயர் B) தொழிற்பெயர் C) இடப்பெயர் D) சினைப்பெயர்.

140. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

A) வாணிபம், வாரணம், விகடகவி, வால்

B) வாணிபம், வாரணம், வால், விகடகவி

C) வால், விகடகவி, வாணிபம், வாரணம்

D) விகடகவி, வாணிபம், வாரணம், வால்.

141. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

A) கற்றல், காற்று, கோடை, கூண்டு, கெண்டை

B) கூண்டு, கொண்டை, காற்று, கற்றல், கோடை

C) கற்றல், கூண்டு, கெண்டை, காற்று, கோடை

D) கற்றல், காற்று, கூண்டு, கெண்டை, கோடை.

142. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

A) தமிழ், ஆங்கிலம், கன்னடம், மலையாளம்

B) கன்னடம், மலையாளம், ஆங்கிலம், தமிழ்

C) ஆங்கிலம், கன்னடம், தமிழ், மலையாளம்

D) மலையாளம், தமிழ், கன்னடம், ஆங்கிலம்.

143. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்கு.

A) அந்தப் பையன் எந்தப் பள்ளியில் படித்து சிறந்தான்

B) எந்தப் பள்ளியில் சிறந்தான் படித்து அந்தப் பையன்

C) படித்தான் சிறந்தான் எந்தப் பள்ளியில் அந்தப் பையன்

D) சிறந்தான் படித்து அந்தப் பையன் எந்தப் பள்ளியில்.

144. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்கு.

A) பெண்களுக்குப் படிப்பெதற்கு அடுப்பூதும்

B) படிப்பெதற்கு அடுப்பூதும் பெண்களுக்கு

C) அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு

D) அடுப்பூதும் படிப்பெதற்கு பெண்களுக்கு.

145. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்கு.

A) ஆசிரியப்பா அகவலோசை பெற்றுவரும்

B) அகவலோசை ஆசிரியப்பா பெற்றுவரும்

C) பெற்றுவரும் ஆசிரியப்பா அகவலோசை

D) ஆசிரியப்பா பெற்றுவரும் அகவலோசை.

146. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்கு.

A) கழனிக்கு கரும்பும் அழகு நெல்லும்

B) நெல்லுங் கரும்பும் கழனிக்கு அழகு

C) கரும்பும் அழகு நெல்லுங் கழனிக்கு

D) அழகு கழனிக்கு நெல்லுங் கரும்பும்.

147. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்கு.

A) திரிகடுகம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்

B) நூல்களுள் திரிகடுகம் ஒன்றாகும் பதினெண் கீழ்க்கணக்கு

C) ஒன்றாகும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திரிகடுகம்

D) பதினெண் கீழ்க்கணக்கு ஒன்றாகும் திரிகடுகம்.

148. ‘தஞ்சை’ – பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) பொருட்பெயர் B) தொழிற்பெயர் C) இடப்பெயர் D) சினைப்பெயர்.

Vidiyal Coaching Centres

149. ‘பொன்னன்’ – பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) பொருட்பெயர் B) தொழிற்பெயர் C) இடப்பெயர் D) சினைப்பெயர்.

150. ‘நாற்காலி’ – பெயர்ச் சொல்லின் வகை அறிக.

A) தொழிற்பெயர் B) இடப்பெயர் C) பொருட்பெயர் D) சினைப்பெயர்.

151. ‘சுக்கு’ – என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) வினைத்தொகை B) காலப்பெயர்

C) வேற்றுமைத்தொகை D) குற்றியலுகரம்.

152. ‘மெய்ப்பொருள்’ – என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) இருபெயரொட்டுப் பண்புத்தொகை B) தொழிற்பெயர்

C) வினைத்தொகை D) வேற்றுமைத்தொகை.

153. ‘உலகம்’ – என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) இடவாகுபெயர் B) வினைத்தொகை

C) வினைமுற்று D) பெயரெச்சம்.

154. ‘நெடுங்கடல்’ – என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) உரிச்சொல் தொடர் B) பண்புத்தொகை

C) ஆகுபெயர் D) பண்புப்பெயர்.

155. ‘கொள்வீர்’ – என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

A) ஏவல் பன்மை வினைமுற்று B) தொழிற்பெயர்

C) ஏவல் ஒருமை வினைமுற்று D) விளி வேற்றுமை.

156. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு.

“இந்தியாவின் தேவைகள் மிகத் தெளிவானவை”

A) தேவைகள் என்றால் என்ன?

B) இந்தியா வளர என்ன வழி?

C) இந்தியாவின் தேவைகள் எப்படிப்பட்டவை?

D) தெளிவும் தேவையும் எது?

157. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு. “நூலறிவால் நுண்ணறிவு பெறலாம்”

A) நுண்ணறிவு என்றால் என்ன?

B) நூலறிவு என்றால் என்ன?

C) நூலறிவால் எதனைப் பெறலாம்?

D) நுண்ணறிவு பெற யாது செய்தல் வேண்டும்?

158. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு.

“படிப்பதென்றால் வள்ளுவரைப் படிக்க வேண்டும்”

A) வள்ளுவரைப் படிக்க வேண்டுமா?

B) எவ்வாறு படிக்க வேண்டும்?

C) ஏன் படிக்க வேண்டும்?

D) எதைப் படிக்க வேண்டும்?

159. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு.

“கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்”

A) கெட்ட போரிடுதல் என்றால் என்ன?

B) போரிட வேண்டுமா?

C) எதனைச் சாய்ப்போம்?

D) வேரோடு சாய்த்தல் என்றால் என்ன?

Vidiyal Coaching Centres

160. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு.

“விஞ்ஞானம் என்னும் அறிவுக்கலை இளைஞருள் பரவ வேண்டும்”

A) அறிவுக்கலை ஏன் பரவ வேண்டும்?

B) இளைஞருள் அறிவு பரவ வேண்டுவது எப்போது?

C) விஞ்ஞானம் என்னும் அறிவுக்கலை யாரிடம் பரவ வேண்டும்?

D) பரவ வேண்டியது விஞ்ஞானம் என்னும் அறிவுக்கலையா?

161. ‘பொன்னி இன்னிசை பாடினாள்’ – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) உடன்பாட்டு வாக்கியம் B) கலவை வாக்கியம்

C) செய்தி வாக்கியம் D) எதிர்மறை வாக்கியம்.

162. ‘உன்வளத் திறமை என்பது என்ன?’ – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக

A) தொடர் வாக்கியம் B) செய்தி வாக்கியம்

C) தனி வாக்கியம் D) வினா வாக்கியம்.

163. ‘உண்மைக்கு அழிவில்லை அல்லவா ’ – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக

A) தொடர் வாக்கியம் B) செய்தி வாக்கியம்

C) உணர்ச்சி வாக்கியம் D) வினா வாக்கியம்.

164. ‘மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுதினர் ’ – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) வினா வாக்கியம் B) செய்தி வாக்கியம்

C) தனி வாக்கியம் D) கட்டளை வாக்கியம்.

165. ‘சிறந்த நூல்களை அரங்கேற்றுதல் பழைய கால வழக்கம்’ – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக

A) தொடர் வாக்கியம் B) செய்தி வாக்கியம்

C) உணர்ச்சி வாக்கியம் D) வியங்கோள் வாக்கியம்.

166. ‘பகலவனைக் கண்ட பனி போல’ – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க:

A) உயர்வு B) நடுக்கம் C) மறைவு D) பகை.

167. ‘சுதந்திரப் பறவை போல’ – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க:

A) தியாகம் B) விரைவு C) கோபம் D) ஆனந்தம்.

168. ‘அடியற்ற மரம் போல்’ – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க:

A) வீழ்ந்து விடுவது B) நிலையாக நிற்பது

C) துளிர்விடுவது D) காய் காய்ப்பது.

169. ‘கடலில் கரைத்த பெருங்காயம் போல’ – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க:

A) மனமில்லை B) அறிவு மங்கியது

C) நிறைவாதல் D) எதற்கும் பயனில்லை.

170. ‘ஞா’ - என்னும் ஒரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?

A) பிரி B) கட்டு C) தை D) ஒட்டு.

171. ‘ஈரோட்டு சிங்கம்’ என அழைக்கப்பட்டவர்

A) ம.பொ.சி B) ஈ.வெ.ரா C) மு.வ D) திரு.வி.க

Vidiyal Coaching Centres

172. ‘பசுமரத்தாணி போல’ – உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க:

A) பதிந்தது B) ஒடிந்தது
C) வளைந்தது D) முறிந்தது.

173. பின்வரும் தொடரில் அமைந்துள்ள இயைபைக் காண்க.

“ தீயே உனக்கொருநாள் தீமூட்டிப் பாரோமோ !
தெய்வமே உன்னையும் நாம் தேம்பியழ வைப்போமோ ”

A) தீயே - தீமூட்டிப்
B) தெய்வமே - தேம்பியழ
C) உன்னையும் - வைப்போமோ
D) பாரோமோ - வைப்போமோ.

174. “இடுக்கட் படினும் இளிவந்த செய்யர்
நடுக்கற்ற காட்சி யவர் ” - சீர்மோனை சுட்டுக

A) இடுக்கட் - இளிவந்த
B) நடுக்கற்ற - காட்சி
C) இளிவந்த - செய்யார்
D) இடுக்கட் - படினும்.

175. “அந்தரத்தில் மேடை அமைத்தார் – அங்கே
அனுப்பிய மின் விசையாற் செய்தி அறிவார் ” - சீர்மோனை சுட்டுக.

A) அந்தரத்தில் - அனுப்பிய
B) அனுப்பிய - அமைத்தார்
C) அந்தரத்தில் - அமைத்தார்
D) அங்கே - அறிவார்.

176. பின் வரும் தொடரில் அமைந்துள்ள மோனையை சுட்டுக.

“இன்னரும் பொழில்களும் இணையில்லா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு” !

A) பொழில்களும் - வளங்களும்
B) மலைகளும் - ஒளிர்தரு
C) இன்னரும் - உன்னத
D) இன்னரும் - இணையிலா.

177. “பண்ணிய பாவம் எல்லாம்
பரிதிமுன் பனியே போல” – அடிமோனையை தேர்க.

A) பண்ணிய - எல்லாம்
B) பரிதிமுன் - போல
C) பண்ணிய - பரிதிமுன்
D) பாவம் - பனியே.

178. ‘உச்சி மேற் புலவர் கொள்’ புலவர் யார்?

A) நச்சினார்க்கினியர் B) சேனாவரையர்
C) பேராசிரியர் D) இளம்பூரணர்.

179. ‘இயற்கை ஓவியம்’ எனும் பெருமைக்குரிய நூல்

A) சிலப்பதிகாரம் B) கம்பராமாயணம்
C) வில்லிபாரதம் D) பத்துப்பாட்டு.

Vidiyal Coaching Centres

180. ‘உத்தர வேதம்’ என்ற அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல்

A) தேவாரம் B) திருவாசகம்

C) திருவாய்மொழி D) திருக்குறள்.

181. ‘அடித்தான்’ இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) அடிக்க B) அடி C) அடித்த D) அடித்து.

182. ‘கற்றான்’ இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) கற்று B) கல் C) கள் D) கற்ற.

183. ‘எழுந்தனள்’ இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) எழு B) எழுதல் C) எழுது D) எழுதுதல்.

184. ‘அமர்ந்தார்’ இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) அமர்ந்த B) அமர்ந்து C) அமர்தல் D) அமர்.

185. ‘துயின்றாள்’ இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க.

A) துயிலும் B) துயில் C) துயின்ற D) துயில.

186. தன்வினை வாக்கியத்தை கண்டறிக

A) தாய் உருட்டினாள் B) தாய் உருட்டுவாள்

C) தாய் உருண்டாள் D) தாய் உருட்டுவித்தார்.

187. ‘பரந்தாமன் படம் வரைந்தான்’ எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

A) தன்வினை வாக்கியம் B) கட்டளை வாக்கியம்

C) பிறவினை வாக்கியம் D) செயப்பாட்டுவினை வாக்கியம்.

188. ‘யா’ – என்னும் ஒரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?

A) துறத்தல் B) கட்டுதல் C) சேர்தல் D) அவிழ்தல்.

189. செயப்பாட்டு வினையைக் கண்டறிக.

A) ‘பாண்டியன் பரிசு’ பாரதிதாசனால் பாடப்பட்டது

B) ‘பாண்டியன் பரிசு’ பாரதிதாசன் பாடினார்

C) பாரதிதாசன் பாண்டியன் பரிசு பாடினார்

D) பாரதிதாசன் பாண்டியன் பரிசு பாடுவார்.

190. ‘ஆ’ - என்னும் ஒரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?

A) வாய் பிளத்தல் B) வலி C) உணவு D) பசு.

191. ‘ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்’ என்ற நீதியை எக்கதாபாத்திரத்தின் மூலம் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது?

A) கண்ணகி B) பாண்டிய அரசன் C) மாதவி D)கோவலன்.

192. தன்வினை வாக்கியத்தை கண்டறிக.

A) தாய் குழந்தைக்கு உணவு உண்பித்தாள்

B) தாய் குழந்தைக்கு உணவு ஊட்டுவாள்

C) தாய் குழந்தைக்கு உணவு ஊட்டுவித்தாள்

D) தாய் குழந்தைக்கு உணவு ஊட்டினாள்.

193. ‘தமிழ் மறை’ என குறிக்கப்படும் நூல்.

A) அகத்தியம் B) திருக்குறள் C) சிலப்பதிகாரம் D) திருமுறை.

VIDIYAL CHENGAM: @ VIVEKANANDA MATRIC.SCHOOL ( NEAR B.D.O OFFICE) :9442810463



Vidiyal Coaching Centres

*194.* பொருத்துக:

| | *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|---|
| | *நூல்* | *நூலாசிரியர்* |
| a) | குயில்பாட்டு | *1.* பாரதிதாசன் |
| b) | இருண்ட வீடு | *2.* நாமக்கல் கவிஞர் |
| c) | கொய்யாக்கனி | *3.* பாரதியார் |
| d) | தமிழன் இதயம் | *4.* பெருஞ்சித்திரனார். |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | *2* | *1* | *3* | *4* |
| B) | *4* | *2* | *1* | *3* |
| C) | *3* | *1* | *4* | *2* |
| D) | *1* | *3* | *2* | *4.* |

*195.* பொருத்துக:

| | *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|---|
| | *நூல்* | *நூலாசிரியர்* |
| a) | கீதை மொழிபெயர்ப்பு | *1.* வாணிதாசன் |
| b) | குடும்ப விளக்கு | *2.* பாரதியார் |
| c) | கொடிமுல்லை | *3.* தமிழ் ஒளி |
| d) | வீராயி | *4.* பாரதிதாசன். |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | *2* | *4* | *1* | *3* |
| B) | *4* | *2* | *3* | *1* |
| C) | *3* | *1* | *4* | *2* |
| D) | *1* | *3* | *2* | *4.* |

Vidiyal Coaching Centres

*196.* பொருத்துக:

| | *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|---|
| | *நூல்* | *நூலாசிரியர்* |
| a) | நந்திக் கலம்பகம் | *1.* திருவள்ளுவர் |
| b) | மணிமேகலை | *2.* ஆசிரியர் பெயர் தெரியவில்லை |
| c) | குற்றாலக் குறவஞ்சி | *3.* திரிகூட இராசப்பக்கவிராயர் |
| d) | திருக்குறள் | *4.* சீத்தலைச்சாத்தனார் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | *2* | *4* | *3* | *1* |
| B) | *3* | *4* | *2* | *1* |
| C) | *4* | *1* | *2* | *3* |
| D) | *1* | *3* | *2* | *4.* |

197. பொருத்துக:

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| | சொல் | | பொருள் |
| a) | திங்கள் | 1. | நட்சத்திரம் |
| b) | வேந்தர் | 2. | ஆகாயம் |
| c) | விண்மீன் | 3. | மாதம் |
| d) | வானம் | 4. | அரசர் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 1 | 3 | 2 | 4 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 2 | 1 | 4 | 3. |

198. பொருத்துக:

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| | சொல் | | பொருள் |
| a) | புனல்கள் | 1. | சோலைகள் |
| b) | பொழில்கள் | 2. | நீர் நிலைகள் |
| c) | சாரல் | 3. | மாலை |
| d) | ஆரம் | 4. | மலை. |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 4 | 3 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 3 | 4 | 1 | 2. |

199. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக.

A) கயல்விழி தேர்வுக்குப் படித்தாள்

B) கயல்விழி தேர்வுக்குப் படிப்பித்தாள்

C) கயல்விழி தேர்வுக்குப் படிப்பாள்

D) கயல்விழி தேர்வுக்குப் படியாள்.

200. செய்வினையைத் தொடரை கண்டறிக.

A) இயேசு காவியம் கண்ணதாசனால் இயற்றப்பட்டது

B) கண்ணதாசன் இயேசுகாவியத்தை இயற்றினார்

C) கண்ணதாசனால் இயேசுகாவியம் இயற்றப்பட்டது

D) இயேசுகாவியம் இயற்றப்பட்டது கண்ணதாசனால்.

.

**- வாழ்த்துகள் -**

Vidiyal Coaching Centres

# ATTENTION VAO & GROUP-II ASPIRANTS

ONE DAY FREE COACHING FOR GENERAL TAMIL @ MTC Campus, Dinakaran stopping, (OPPOSITE TO Dinesh Hospital) VELLORE BY OUR EXPERT FACULTY PROF. Mr.M.KANNAN M.A, M.Phil, B.Ed., ON 26TH January ,2011. 9 A.M TO 6 P.M . ATTEND THE CLASS & CONFIRM YOUR SUCCESS. **NO COACHING FEE , ITS ABSOLUTELY FREE. For details : VIDIYAL - 9578533174, 9487640063.**

***New*** : **VIDIYAL WEEK END COACHING CLASSES FOR GROUP-I & GROUP-II CONDUCTED @ MTC CAMPUS, DINAKARAN STOPPING, (OPP TO DINESH HOSPITAL), KOSAPETTAI, VELLORE.**

Vidiyal Coaching Centres

## *VIDIYAL COACHING VENUES FOR GR-I & II*

VIDIYAL VELLORE : ***MTC CENTRE CAMPUS***
NEAR CMC EYE HOSPITAL
OPP. TO DINESH HOSPITAL
DINAKARAN STOP, **VELLORE-1**.

VIDIYAL ARNI : ***NO.6, THATCHUR ROAD***
NEAR HEAD POST OFFICE
**ARNI**, T.V.MALAI DIST
TAMILNADU.

VIDIYAL POLUR : ***TOWN MATRIC HR.SEC.SCHOOL***
NEAR RAILWAY GATE
VELLORE ROAD
**POLUR.**

VIDIYAL CHENGAM: ***VIVEKANANDA MATRIC SCHOOL***
NEAR BDO OFFICE
BANGALAORE ROAD
**CHENGAM**.

# VAO MODEL EXAM FOR ALL

*MODEL EXAM FOR ALL VAO ASPIRANTS WILL BE CONDUCTED BY VIDIYAL VELLORE ON 31ST JANUARY 2011 @* VIDIYAL COACHING CENTRE, *MTC CAMPUS, DINAKARAN STOPPING, (OPP TO DINESH HOSPITAL), KOSAPETTAI, VELLORE. FEE RS.*50/-*ONLY.*

## வெற்றி விதிகள்: 10

1. நாளை படித்துக் கொள்ளலாம் என்று எந்தப் பாடத்தையும் தள்ளிப் போடாதீர்கள். அது பாடச் சுமையை அதிகரிக்கவே செய்யும். அன்றைய பாடத்தை அன்றே படித்துவிடுவதுதான் நல்லது.
2. கடினமான பகுதிகளை எழுதிப் பழகுங்கள்.
3. படிக்க வேண்டிய பாடங்களைத் தேதி, நேரம், போட்டு அட்டவணை தயார் செய்துகொண்டு படிக்க ஆரம்பித்தால் தேர்வு மிகவும் எளிமை.
4. சாட்டிங், குறுஞ்செய்தி, வெட்டி அரட்டை (நேரில், செல்போனில்), பகல் உறக்கம் போன்றவற்றை மூட்டை கட்டி வைத்துவிட்டு பாடத்தில் மட்டுமே கவனம் செலுத்துங்கள்.
5. **Group II** – பணியை அடைந்தே தீரவேண்டும், அதற்கான பலப் பரீட்சைதான் இந்தத் தேர்வு என்பதை அடிக்கடி மனதில் நிறுத்துங்கள்.
6. முதல்நாள் படிக்காமல் போன பாடத்தை மறுநாள் கொஞ்சம் கூடுதல் நேரம் ஒதுக்கிப் படித்து முடிக்கப் பாருங்கள். பாடச்சுமையும் பாவச்சுமைபோல்தான். அதை வளரவிட்டால், வாழ்க்கை முழுதும் தொடர்ந்து வந்து துன்புறுத்தும்.
7. அக்கம் பக்கத்து விசேஷம், சொந்தக்காரர்கள் கல்யாணம் இவற்றைத் தேர்வுநாள் வரை தவிர்த்திடுங்கள்.
8. வாரந்திரத் தேர்வு எழுதிப் பழகுங்கள்.
9. கூடிப் படிக்கும் பழக்கம் மாணவர்களிடம் உண்டு. ஆனால், இரண்டு பேருக்குமேல் சேராதீர்கள். எண்ணிக்கை அதிகரிக்கும்போது வெட்டி அரட்டையும் அதிகரிக்கும்.
10. பயிற்றுநர்களிடம் மிகநட்பாக இருங்கள். பாடத்தில் எந்தச் சந்தேகம் இருந்தாலும் தயங்காமல் அவர்களிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

Vidiyal Coaching Centres